# உயிர்ப்பு காலத்தின் மூன்றாம் ஞாயிறு

## திருவழிபாடு ஆண்டு A

**இன்றைய வாசகங்கள்:**

திருத்தூதர் பணிகள் நூலிலிருந்து வாசகம் 2: 14, 22-33,

திருப்பாடல் 16:1-2, 5-6, 7-8, 9-10,

தூய பேதுரு எழுதிய முதல் திருமுகத்திலிருந்து வாசகம் 1: 17-21,

லூக்கா எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம் 24: 13-35)

## திருப்பலி முன்னுரை:

எங்களோடு தங்கும் ஆண்டவரே!

வழிப்போக்கர்களே, உயிர்த்தெழுந்த நம் ஆண்டவர் இயேசுவின் பெயரால், உயிர்ப்பு காலத்தின் மூன்றாம் ஞாயிறு திருப்பலிக்கு உங்கள் அனைவரையும் அன்போடு வரவேற்கிறோம். இருள் சூழும் நேரத்தில் நாம் நடந்து செல்லும்போது, இயேசு நமக்கு வழித்துணையாக வருகிறார் என்பதை உணர்ந்துகொள்ள இன்றைய திருவழிபாடு நமக்கு அழைப்பு விடுக்கிறது. இயேசுவின் இறப்பால் மனம் உடைந்து போயிருந்த சீடர்கள் இருவர் எம்மாவு செல்லும் வழியில், ஆண்டவர் உடன் நடப்பதைக் காண்கிறோம். அவர்களின் அவநம்பிக்கையைப் போக்கும் விதமாக மறைநூலின் இறைவாக்குகள் மூலம் தமது உயிர்ப்பை விளக்கி கூறுகிறார். இயேசு அப்பத்தைப் பிட்டபோது, சீடர்கள் அவரைக் கண்டு கொண்டார்கள். நற்கருணையில் நம்மோடு உடனிருக்கும் ஆண்டவர் இயேசுவை, நமது விசுவாசப் பயணத்தில் வழித் துணையாக கொண்டு வாழும் வரம்வேண்டி, இந்த திருப்பலியில் பங்கேற்போம்.

## முதல் வாசகம்

நான் ஆண்டவரை எப்போதும் என் கண்முன் வைத்துள்ளேன்

**திருத்தூதர் பணிகள் நூலிலிருந்து வாசகம் 2: 14, 22-33**

அப்பொழுது பேதுரு பதினொருவருடன் சேர்ந்து, எழுந்து நின்று, உரத்தக் குரலில் அவர்களிடம் பின்வருமாறு கூறினார் ”யூத மக்களே, எருசலேமில் வாழும் மக்களே, இதைத் தெரிந்துக்கொள்ளுங்கள். எனது சொற்களைக் கவனித்துக் கேளுங்கள். இஸ்ரயேல் மக்களே, நீங்கள் இந்த வார்த்தைகளைக் கேளுங்கள்.கடவுள் நாசரேத்து இயேசுவின் வழியாக உங்கள் நடுவில் வல்லசெயல்களையும் அருஞ்செயல்களையும் அடையாளங்களையும் செய்து, அவரை இன்னாரென்று உறுதியாகக்காண்பித்தார். இது நீங்கள் அறிந்ததே. கடவுள் தாம் வரையறுத்துள்ள திட்டத்தின்படியும், தம் முன்னறிவின்படியும் இந்த இயேசுவை உங்கள் கையில் விட்டுவிட்டார். நீங்கள் திருச்சட்டம் அறியாதார் மூலம் அவரைச் சிலுவையில் அறைந்துக்கொன்றீர்கள். ஆனால் கடவுள் அவரை மரணவேதனையினின்று விடுவித்து உயிர்த்தெழச்செய்தார். ஏனென்றால் மரணம் அவரைத் தன் பிடியில் வைத்திருக்க முடியவில்லை. தாவீது அவரைக்குறித்துக் கூறியது “நான் ஆண்டவரை எப்போதும் என் கண்முன் வைத்துள்ளேன் அவர் என் வலப்பக்கம் உள்ளார் எனவே நான் அசைவுறேன். இதனால் என் இதயம் பேறுவகைகொள்கின்றது என் நா மகிழ்ச்சியால் நிறைந்துள்ளது. என் உடலும் எதிர்பார்ப்பில் நிலைத்திருக்கும். ஏனென்றால் என்னைப் பாதாளத்திடம் ஒப்புவிக்கமாட்டீர். உம் தூயவனைப் படுக்குழியைக் காணவிடமாட்டீர். வாழ்வின்வழியை நான் அறியச்செய்வீர் உமது முன்னிலையில் எனக்கு நிறைவான மகிழ்ச்சி உண்டு.“ ”சகோதர சகோதரிகளே, நமது குல முதல்வராகிய தாவீதைக் குறித்து நான் சொல்வதை மறுக்கமாட்டீர்கள். அவர் காலமாகி அடக்கம் செய்யப்பட்டார். அவர் கல்லறை இந்நாள்வரை நம்மிடையே இருக்கிறது. அவர் இறைவாக்கினர் என்பதால், தம் வழித்தோன்றல் ஒருவர் அவரது அரியணையில் வீற்றிருப்பார் என்று கடவுள் உறுதியாக ஆணையிட்டுக் கூறியதை அறிந்திருந்தார். அவர் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை முன்னறிந்து, “அவரைப் பாதாளத்திடம் ஒப்புவிக்கமாட்டீர் அவரது உடல் படுகுழியைக் காணவிடமாட்டீர்“ என்று கூறியிருக்கிறார். கடவுள் இந்த இயேசுவை உயிாத்தெழச் செய்தார். இதற்கு நாங்கள் அனைவரும் சாட்சிகள். அவர் கடவுளின் வலதுப்பக்கத்துக்கு உயர்த்தப்பட்டு, வாக்களிக்கப்பட்ட தூய ஆவியைத் தம் தந்தையிடமிருந்து பெற்றுப் பொழிந்தருளினார். நீங்கள் காண்பதும் கேட்பதும் இதுதான்.

- இது ஆண்டவர் வழங்கும் அருள்வாக்கு.

- இறைவா உமக்கு நன்றி

## பதிலுரைப் பாடல்

ஆண்டவரைத் தேடுவோரின் இதயம் அக்களிப்பதாக!

**திருப்பாடல் 16:1-2, 5-6, 7-8, 9-10**

இறைவா, என்னைக் காத்தருளும் உம்மிடம் நான் அடைக்கலம் புகுந்துள்ளேன். நான் ஆண்டவரிடம் "நீரே என் தலைவர் உம்மையன்றி வேறு செல்வம் எனக்கு இல்லை" என்று சொன்னேன். - பல்லவி

ஆண்டவர்தாமே என் உரிமைச் சொத்து அவரே என் கிண்ணம் எனக்குரிய பங்கைக் காப்பவரும் அவரே இனிமையான நிலங்கள் எனக்குப் பாகமாகக் கிடைத்தன் உண்மையாகவே என் உரிமைச் சொத்து வளமானதே. - பல்லவி

எனக்கு அறிவுரை வழங்கும் ஆண்டவரைப் போற்றுகின்றேன் இரவில்கூட என் மனச்சான்று என்னை எச்சரிக்கின்றது. ஆண்டவரை எப்போதும் என் கண்முன் வைத்துள்ளேன் அவர் என் வலப்பக்கம் உள்ளார் எனவே, நான் அசைவுறேன். - பல்லவி

என் இதயம் அக்களிக்கின்றது என் உள்ளம் மகிழ்ந்து துள்ளுகின்றது என் உடலும் பாதுகாப்பில் நிலைத்திருக்கும். ஏனெனில், என்னைப் பாதாளத்திடம் ஒப்பவிக்கமாட்டீர் உம் அன்பனைப் படுகுழியைக் காண விடமாட்டீர் - பல்லவி

## இரண்டாம் வாசகம்

நீங்கள் "தந்தையே" என அழைத்து மன்றாடுபவர், ஆளைப் பார்த்தல்ல, அவரவர் செயல்களின் படியே தீர்ப்பு வழங்குகிறார்.

**தூய பேதுரு எழுதிய முதல் திருமுகத்திலிருந்து வாசகம் 1: 17-21**

நீங்கள் "தந்தையே" என அழைத்து மன்றாடுபவர், ஆளைப் பார்த்தல்ல, அவரவர் செயல்களின் படியே தீர்ப்பு வழங்குகிறார். ஆகையால் இவ்வுலகில் நீங்கள் அன்னியராய் வாழும் காலமெல்லாம் அவருக்கு அஞ்சி வாழுங்கள் உங்கள் மூதாதையரிடமிருந்து வழிவழியாய் வந்த வீணான நடத்தையினின்று உங்களை விடுவிக்கக் கொடுக்கப்பட்ட விலை என்னவென்று உங்களுக்குத் தெரியும். அது பொன்னும் வெள்ளியும் போன்று அழிவுக்குட்பட்டது அல்ல் மாறாக, மாசு மறுவற்ற ஆட்டுக் குட்டியைப் போன்ற கிறிஸ்துவின் உயர்மதிப்புள்ள இரத்தமாகும் உலகம் தோன்றுமுன்னரே முன்குறிக்கப்பட்ட அவர், இந்தக் கடைசிக் காலத்தில் உங்களுக்காக வெளிப்படுத்தப்பட்டார். அவர் வழியாகத்தான் நீங்கள் கடவுள்மீது நம்பிக்கை கொண்டுள்ளீர்கள். இறந்த அவரைக் கடவுள் உயிர்த்தெழச் செய்து பெருமைப்படுத்தியுள்ளார். இதனால் நீங்கள் கடவுளிடம் நம்பிக்கை கொண்டு அவரை எதிர்நோக்கி இருக்கவே இவ்வாறு செய்தார்.

- இது ஆண்டவர் வழங்கும் அருள்வாக்கு

- இறைவா உமக்கு நன்றி

## நற்செய்திக்கு முன் வாழ்த்தொலி

அல்லேலூயா, அல்லேலூயா! வழியிலே அவர் நம்மோடு பேசி, மறைநூலை விளக்கும்போது நம் உள்ளம் பற்றி எரியவில்லையா. அல்லேலூயா

## நற்செய்தி வாசகம்

லூக்கா எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம் 24: 13-35

வாரத்தின் முதல் நாள் சீடர்களுள் இருவர் எருசலேமிலிருந்து ஏறத்தாழ பதினொரு கிலோ மீட்டர் தொலையிலுள்ள ஓர் ஊருக்குச் சென்று கொண்டிருந்தனர். அவ்வூரின் பெயர் எம்மாவு. அவர்கள் இந்நிகழ்ச்சிகள் அனைத்தையும் குறித்து ஒருவரோடு ஒருவர் உரையாடிக்கொண்டே சென்றார்கள். இப்படி அவர்கள் உரையாடிக்கொண்டும் வினவிக்கொண்டும் சென்றபோது, இயேசு நெருங்கிவந்து அவர்களோடு நடந்து சென்றார். ஆனால் அவர் யார் என்று அறிந்து உணர முடியாதவாறு அவர்கள் கண்கள் மறைக்கப்பட்டிருந்தன. அவர் அவர்களை நோக்கி, வழிநெடுகிலும் நீங்கள் ஒருவரோடு ஒருவர் பேசிக்கொண்டிருப்பது என்ன?" என்று கேட்டார். அவர்கள் முக வாட்டத்தோடு நின்றார்கள். அவர்களுள் கிளயோப்பா என்னும் பெயருடைய ஒருவர் அவரிடம் மறுமொழியாக, எருசலேமில் தங்கியிருப்பவர்களுள் உமக்குமட்டும்தான் இந்நாள்களில் நிகழ்ந்தவை தெரியாதோ!"என்றார். அதற்கு அவர் அவர்களிடம், என்ன நிகழ்ந்தது?" என்று கேட்டார். அவர்கள் அவரிடம், நாசரேத்து இயேசுவைப் பற்றியேதான் பேசுகின்றோம். அவர் கடவுளுக்கும் மக்கள் எல்லாருக்கும் முன்பாகச் சொல்லிலும் செயலிலும் வல்ல இறைவாக்கினராகத் திகழ்ந்தார். அவர் இஸ்ரயேலை மீட்கப் போகிறார் என்று நாங்கள் எதிர்பார்த்து இருந்தோம். ஆனால் தலைமைக் குருக்களும் ஆட்சியாளர்களும் அவருக்கு மரணதண்டனை விதித்துச் சிலுவையில் அறைந்தார்கள். இவையெல்லாம் நிகழ்ந்து இன்றோடு மூன்று நாள்கள் ஆகின்றன. ஆனால் இன்று எங்களைச் சேர்ந்த பெண்களுள் சிலர் எங்களை மலைப்புக்குள்ளாக்கினர் அவர்கள் விடியற்காலையில் கல்லறைக்குச் சென்றார்கள் அவருடைய உடலைக் காணாது திரும்பி வந்து, வானதூதர்களைக் கண்டதாகவும் இயேசு உயிரோடிருக்கிறார் என்று அவர்கள் கூறியதாகவும் சொன்னார்கள். எங்களோடு இருந்தவர்களுள் சிலரும் கல்லறைக்குச் சென்று, அப்பெண்கள் சொன்னவாறே இருக்கக் கண்டனர். ஆனால் அவர்கள் இயேசுவைக் காணவில்லை" என்றார்கள். இயேசு அவர்களை நோக்கி, ஹஹஅறிவிலிகளே! இறைவாக்கினர்கள் உரைத்த எல்லாவற்றையும் நம்ப இயலாத மந்த உள்ளத்தினரே! மெசியா தாம் மாட்சியடைவதற்குமுன் இத்துன்பங்களைப் படவேண்டுமல்லவா!" என்றார். மேலும் மோசேமுதல் இறைவாக்கினர்வரை அனைவரின் நூல்களிலும் தம்மைக் குறித்து எழுதப்பட்ட யாவற்றையும் அவர் அவர்களுக்கு விளக்கினார். அவர்கள் தாங்கள்

போகவேண்டிய ஊரை நெருங்கி வந்தார்கள். அவரோ அதற்கு அப்பால் போகிறவர்போலக் காட்டிக்கொண்டார். அவர்கள் அவரிடம், ஹஹஎங்களோடு தங்கும் ஏனெனில் மாலை நேரம் ஆயிற்று பொழுதும் போயிற்று" என்று கூறிக் கட்டாயப்படுத்தி அவரை இணங்கவைத்தார்கள். அவர் அங்குத் தங்குமாறு அவர்களோடு சென்றார். அவர்களோடு அவர் பந்தியில் அமர்ந்திருந்தபோது அப்பத்தை எடுத்து, கடவுளைப் போற்றி, பிட்டு அவர்களுக்குக் கொடுத்தார். அப்போது அவர்கள் கண்கள் திறந்தன. அவர்களும் அவரை அடையாளம் கண்டுகொண்டார்கள். உடனே அவர் அவர்களிடமிருந்து மறைந்துபோனார். அப்போது, அவர்கள் ஒருவரையொருவர் நோக்கி, ஹஹவழியிலே அவர் நம்மோடு பேசி, மறைநூலை விளக்கும்போது நம் உள்ளம் பற்றி எரியவில்லையா?" என்று பேசிக்கொண்டார்கள். அந்நேரமே அவர்கள் புறப்பட்டு எருசலேமுக்குத் திரும்பிப் போனார்கள். அங்கே பதினொருவரும் அவர்களோடு இருந்தவர்களும் குழுமியிருக்கக் கண்டார்கள். அங்கிருந்தவர்கள், ஆண்டவர் உண்மையாகவே உயிருடன் எழுப்பப்பட்டார். அவர் சீமோனுக்குத் தோற்றம் அளித்துள்ளார்" என்று சொன்னார்கள். அவர்கள் வழியில் நிகழ்ந்தவற்றையும் அவர் அப்பத்தைப் பிட்டுக்கொடுக்கும்போது அவரைக் கண்டுணர்ந்துகொண்டதையும் அங்கிருந்தவர்களுக்கு எடுத்துரைத்தார்கள்.

- இது கிறிஸ்து வழங்கும் நற்செய்தி.

- கிறிஸ்துவே உமக்கு புகழ்.

## விசுவாசிகள் மன்றாட்டுகள்:

விண்ணுலகில் வீற்றிருப்பவரே! உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன்.

பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

**1. வாழ்வின் வழித்துணையே இறைவா,**

எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவரும், உம்மையே வழித் துணையாக கொண்டு விசுவாச வாழ்வில் நடை பயிலவும், உம் மக்களை வழிநடத்தவும் உதவுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

**2. மூவுலக அரசரே இறைவா,**

உலகெங்கும் வாழும் கிறிஸ்தவர்கள் அனைவரும் நற்கருணையில் உம் திருமகனின் உடனிருப்பை உணரவும், பிற சமயத்தினர் முன்னிலையில் உமக்கு சான்று பகரவும் உதவுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

**3. இரக்கத்தின் ஊற்றே இறைவா,**

உலகத்தின் கவலைகளுக்கும், துன்பங்களுக்கும் தீர்வு தேடி அலையும் மக்கள் அனைவரும், உம் வழியாக அமைதி காணவும், நீரே உண்மையான கடவுள் என்பதை உணரவும் உதவுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

**4. அருட்செல்வங்களால் எங்களை ஆசீர்வதிக்கும் அன்புத்தந்தையே! எம் இறைவா!**

எங்களை பராமரித்து பாதுகாத்த எம் பெரியவர்கள் இன்று ஆதரவின்றி, அனாதைகளாக்கப்பட்டு, தெரு ஒரங்களிலும், பேருந்து நிலையங்களிலும் முதியோர் இல்லங்களிலும் தனித்து விடப்பட்டு, அவர்கள் படும் வேதனைகள் தொடர் நிகழ்வாகவே நிகழ்ந்து கொண்டிருக்கின்றது. எனவே அவர்கள் உம் இறை இரக்கத்தினால், பாதுகாப்புடன் வாழ, இத்தலைமுறையினர் பெரியவர்கள் மேன்மையை உணர்ந்து அவர்களை பாதுகாக்க தேவையான அருளை பொழிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**5. என்றுமே மாறாத அன்பு கொண்ட எம் இறைவா,**

இன்றையச் சூழலில் நாங்கள் எங்கள் குடும்பத்தில் நல்ல தலைவர்களாகவும், சமுதாயத்தில் நல்ல வழிகாட்டிகளாகவும், தடுமாறுகிறவர்களுக்குப் புதிய பாதையாகவும், வாழ்வை இழந்தவர்களுக்கு வாழ்வாகவும் எம் ஆயனாம் இயேசுவின் பாதையில் தடம் மாறாது பயணம் செல்ல தேவையான அருள் வரங்களை பொழிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**இன்றைய சிந்தனை**

# ”எங்களோடு தங்கும்”

நம் தேவன் நம்மோடு தங்க வேண்டும். எந்த தலைவரும் பெரிய மனிதரும் தரும் மகிழ்ச்சியை விட பல பல மடங்கு பெரிதல்லவா. ஒப்பிட முடியா அனுபவம் அது. இயேசுவோடு தங்கும் நபராக, குடும்பமாக நீங்களும் உங்கள் குடும்பமும் இருக்கட்டும். உங்களுக்கு எதுவும் குறையிருக்காது எல்லாம் நிறைவாக இருக்கும். ஒன்றில் இயேசு உங்களோடு தங்க வேண்டும் அல்லது நீங்கள் இயேசுவோடு தங்கவேண்டும்.

எம்மாவு சீடரோடு இயேசு தங்கியதால் அவர்கள் கண்கள் - அகக்கண்கள், அறிவுக்கண்கள், சமூகப் பார்வைகள்- திறக்கப்பட்டது. பயம் நீங்கியது. நம்பிக்கை புதுப்பிக்கப்பட்டது. அன்பால், ஆர்வத்தால் பற்றி எரியும் இதயம் பெற்றவராயினர்.புதிய வலிமை பெற்றனர். தங்கள் வாழ்க்கையில் புது நிறைவைக் கண்டனர். ”சக்கேயு,இன்று உமது வீட்டில் நான் தங்க வேண்டும்” என்று சொல்லி இயேசு அவரது வீட்டில் தங்கி விருந்துண்டார். சக்கேயுவின் மகிழ்ச்சிக்கு எல்லை ஏது? அவரது வீடு ஆண்டவரின் ஆசீர்வாதத்தை முழுமையாகப் பெற்றுள்ளதல்லவா. அவரது உள்ளத்து மகிழ்ச்சி அவரது மன மாற்றத்தில் வெளிப்படுகிறதல்லவா. திருத்தூதர் அந்திரேயா இயேசுவோடுள்ள நெருக்கத்தை அவரோடு தங்கியபோது பெறுகிறார்.” ரபி, நீர் எங்கே தங்கியிருக்கிறீர்?”(யோவா 1:38) என்று விவரங்கள் கேட்டு, மாலை நான்கு மணி. அன்று அவர்கள் அவரோடு தங்கினார்கள்.(யோவா 1:39) அன்று அவருக்கு அளவில்லா மகிழ்ச்சி. வாழ்க்கையில் காணாத எதையோ கண்ட நிறைவு. நிம்மதி. ஓடிப்போய் பேதுருவிடம் சொல்லுகிறார். இதுதான் இயேசு நம்மோடு தங்குவதிலும் நாம் இயேசுவோடு தங்குவதிலும் உள்ள பலன். ஆகவே இயேசுவோடு தங்கும் பெரும் பாக்கியத்தை உருவாக்கிக் கொள்ளுவோம். ஆசீர்வதிக்கப்பட்ட வாழ்வாக இருக்கும்.

**மன்றாட்டு:**

இறைவா, உம் மகன் இயேசுவை நாங்கள் ஆண்டவராக ஏற்று அவருக்குச் சான்று பகர எங்களைத் திடப்படுத்தியருளும்.

## பாஸ்கா காலம் மூன்றாம் ஞாயிறு

# ஒடுக்கப்பட்டோருக்கு நற்செய்தி அறிவித்தல்

### தொடக்கச் செபம்:

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே! எமது வாழ்வின் துன்பங்களில் நாங்கள் சிக்கித் தவிக்கும்போது, பல நேரங்களில் உமது பிரசன்னத்தை மறந்து விடுகிறோம். உமது வார்த்தையினால் உம் உடனிருப்பை நாங்கள் உணரவும், நீர் கொணர்ந்த உயிர்ப்பின் அமைதியைப் பிறருக்கு வெளிப்படுத்தத் தேவையான வரமருள வேண்டுமென மன்றாடுகிறோம். ஆமென்.

### இறைவார்த்தை:

முதலாம் வாசகம்: திருத்தூதர் பணிகள் 2 : 14, 22 – 33

சீடர்கள் சார்பாக பேதுரு யூத மக்களிடம் பேசுகிறார். உயிர்ப்பு என்பது அதிமுக்கியமான அம்சம் எனவும், அவர்கள் எதிர்பார்த்துக் காத்திருந்த மெசியா இயேசுதான் என்றும் எடுத்தியம்புகிறார். இயேசு அறிவித்த நற்செய்தி, செய்த புதுமைகள், அருங்குறிகள் அனைத்தும் கடவுளால் நடந்தவையே. இருந்தும் கடவுளின் திருவுளப்படி நடந்த இயேசுவை யூதர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. பேதுரு விவிலியத்தின் அடிப்படையில் தாவீது அரசர் வம்சத்திலிருந்து மெசியா வருவார் என்று இறைவாக்குரைத்துச் சென்றுள்ளார் என்றும், இதே இயேசு பெந்தகோஸ்து பெருவிழா அன்று தூய ஆவியானவரை அனுப்பினார் என்றும் கூறினார்.



இரண்டாம் வாசகம்: 1 பேதுரு 1 : 17 – 21

இந்த விவிலியப்பகுதி இயேசுவின் விலைமதிப்பில்லா இரத்தத்தினால் பெறப்பட்ட புதுவாழ்வு வாழ கிறிஸ்தவர்களுக்கு அழைப்பு விடுக்கிறது. அவர்கள் கடவுளின் மீது நம்பிக்கை வைத்து, தூய வாழ்வு வாழ அழைக்கப்படுகிறார்கள்.

நற்செய்தி வாசகம்: லூக்கா 24 : 13 – 35

முழு கிறிஸ்தவ வாழ்வையும் இருபதே வசனங்களில் எம்மாவுஸ் நிகழ்வு விளக்குகிறது. உயிர்த்த ஞாயிறன்று இரண்டு சீடர்கள் எருசலேமை விட்டுச் செல்கிறார்கள் எனத் தொடங்குகிறது. எருசலேமை விட்டுச் செல்வதென்பது இயேசு அளித்த சமூகத்தையும் வாழ்வையும் நம்பிக்கையையும் விட்டு விலகிச் செல்வதற்குச் சமம் என லூக்கா எண்ணுகிறார். ஏனெனில் எருசலேமில் இருந்து தான் கிறிஸ்தவம் பறைசாற்றப்படவேண்டும் என்பது கடவுளின் திருவுளம். தவறான திசையில் செல்லும் இந்த இருவரும் இயேசுவை விட்டே விலகிச் செல்கின்றனர். ஏமாற்றமடைந்த இவர்களின் மனநிலையால் உயிர்த்த இயேசுவைக் கண்டுணர முடியவில்லை. அவர்களது பயணம் முழுவதும் இயேசு அவர்களோடு பயணம் செய்து, உரையாடி, இறைவார்த்தையை எடுத்துரைத்து, இயேசுவின் சிலுவைச் சாவு சோகமான இழிவானதல்ல என்று உணர்த்தி, இறுதியில் அப்பத்தை ஆசிர்வதித்து அளிக்கையில் தன்னை அவர் வெளிப்படுத்த, அவர்களின் ஞானக் கண்கள் திறக்கப்பட்டு உயிர்த்த இயேசுவை கண்டு கொண்டனர்.

## தியானிப்போம்:

நமது வாழ்வில் அனைத்தும் செவ்வனே நடந்தால் தான் கடவுளின் பிரசன்னத்தை ஆதரவையும் நம்மால் உணர முடிகிறது. துன்பங்கள் சோதனைகள் ஏமாற்றங்கள் வரும்போது நாம் நம்மிலே ஊன்றிய இறைவார்த்தைகளை மறந்து எளிதில் சாத்தானின் வலையில் விழுந்து, உணர்ச்சிகள் கலங்கித் தவிக்கிறோம்.

இந்த நவீன நுகர்வோர் கலாச்சார உலகில், பொருட்களை, திறமைகளை, நேரத்தை, வளத்தைப் பிறரிடமிருந்து பெறுவதிலும் அபகரிப்பதிலும் கவனமாக இருக்கிறோமேயன்றி கொடுப்பதிலும் பகிர்வதிலும் தியாகம் செய்வதிலும் அக்கறை செலுத்துவதில்லை. நம்மிடையே இறையரசு வளர, ஈகை, பகிர்வு, நீதி, சமத்துவம் போன்ற நற்பண்புகள் நம்மில் வளர வேண்டும். முதலில் “எல்லாம் எனக்கே எனக்காய்” என்று நம்மிலே இருக்கும் எண்ணம் மாற வேண்டும்.

உண்மையான கிறிஸ்தவ சமூகமாக, கிறிஸ்துவின் திருவுடலையும் இரத்தத்தையும் உட்கொள்வதோடு மட்டுமல்லாமல் கொடுப்பது நமக்குச் சிரமமாக இருந்தாலும் நம்மிடம் உள்ளதைப் பகிர்ந்து வாழ்வதே கிறிஸ்தவர்களாகிய நமக்குக் கடவுள் அளித்த முதற்பணி. அப்போதுதான், உயிர்த்த கிறிஸ்துவின் வாழ்வை வாழ்வாக்கி, நம்மை ஆசீர்வதித்துப் வளப்படுத்தும் கடவுளின் சித்தப்படி வாழ முடியும்.

## சிந்திப்போம்:

### அன்பியங்களுக்காக:

நாம் வாசிக்கக் கேட்ட இறைவார்த்தைகளில் நம் மனதைத் தொட்டவைகளைப் பற்றி பிறரோடு பகிர்ந்து கொள்வோம்.

நமது அன்பியங்களில் தனிமையில் தவிப்போரையும் உதவி தேவைப்படுவோரையும் அடையாளம் கண்டு அவர்களுக்கு உதவ அக்கறை எடுக்கவும்.

இப்படிப்பட்ட சகோதர சகோதரிகளுக்கு எப்படி உதவலாம் என குழுவாகக் கலந்தாலோசித்து முடிவெடுக்கவும்.

### ஆலயப் பணிக்குழுக்களுக்காக:

நாம் வாசிக்கக் கேட்ட இறைவார்த்தைகளில் நம் மனதைத் தொட்டவைகளைப் பற்றி பிறரோடு பகிர்ந்து கொள்வோம்.

உண்மையான கிறிஸ்தவ சமூகமாக, கிறிஸ்துவின் திருவுடலையும் இரத்தத்தையும் உட்கொள்வதோடு மட்டுமல்லாமல் கொடுப்பது நமக்குச் சிரமமாக இருந்தாலும் நம்மிடம் உள்ளதைப் பகிர்ந்து வாழ்வதே கிறிஸ்தவர்களாகிய நமக்குக் கடவுள் அளித்த முதற்பணி. அப்போதுதான், உயிர்த்த கிறிஸ்துவின் வாழ்வை வாழ்வாக்கி, நம்மை ஆசீர்வதித்துப் வளப்படுத்தும் கடவுளின் சித்தப்படி வாழ முடியும்.

## சிந்திப்போம்:

### அன்பியங்களுக்காக:

நாம் வாசிக்கக் கேட்ட இறைவார்த்தைகளில் நம் மனதைத் தொட்டவைகளைப் பற்றி பிறரோடு பகிர்ந்து கொள்வோம்.

நமது அன்பியங்களில் தனிமையில் தவிப்போரையும் உதவி தேவைப்படுவோரையும் அடையாளம் கண்டு அவர்களுக்கு உதவ அக்கறை எடுக்கவும்.

உண்மையான கிறிஸ்தவ சமூகமாக, கிறிஸ்துவின் திருவுடலையும் இரத்தத்தையும் உட்கொள்வதோடு மட்டுமல்லாமல் கொடுப்பது நமக்குச் சிரமமாக இருந்தாலும் நம்மிடம் உள்ளதைப் பகிர்ந்து வாழ்வதே கிறிஸ்தவர்களாகிய நமக்குக் கடவுள் அளித்த முதற்பணி. அப்போதுதான், உயிர்த்த கிறிஸ்துவின் வாழ்வை வாழ்வாக்கி, நம்மை ஆசீர்வதித்துப் வலுப்படுத்தும் கடவுளின் சித்தப்படி வாழ முடியும்.

## சிந்திப்போம்:

### அன்பியங்களுக்காக:

நாம் வாசிக்கக் கேட்ட இறைவார்த்தைகளில் நம் மனதைத் தொட்டவைகளைப் பற்றி பிறரோடு பகிர்ந்து கொள்வோம்.

நமது அன்பியங்களில் தனிமையில் தவிப்போரையும் உதவி தேவைப்படுவோரையும் அடையாளம் கண்டு அவர்களுக்கு உதவ அக்கறை எடுக்கவும்.

இப்படிப்பட்ட சகோதர சகோதரிகளுக்கு எப்படி உதவலாம் என குழுவாகக் கலந்தாலோசித்து முடிவெடுக்கவும்.

### ஆலயப் பணிக்குழுக்களுக்காக:

நாம் வாசிக்கக் கேட்ட இறைவார்த்தைகளில் நம் மனதைத் தொட்டவைகளைப் பற்றி பிறரோடு பகிர்ந்து கொள்வோம்.

## நிறைவு செபம்:

மரித்தோரிடமிருந்து உயிர்த்து உலகிற்கு ஒளியாக வந்த இயேசு கிறிஸ்துவாகிய எம் பெருமானே! ஏழைகளிடத்திலும் ஒடுக்கப்பட்டோரிடத்திலும் உம்மை நாங்கள் எமது வாழ்க்கைச் சூழலில் கண்டு ஆராதிக்கவும் புகழவும், அம்மக்களுக்கு எம்மாலான உதவிகளைச் செய்ய எங்கள் ஞானக் கண்களைத் திறந்து எங்களை ஆசிர்வதிக்க வேண்டுமென உமது ஜீவனுள்ள நாமத்தில் செபிக்கிறோம். ஆமென்.

# என் பாஸ்கா காலச் சிந்தனைப் பதிவேடு

